**தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை - 2022**

---

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2006 இன் 17 ஆம் இலக்க தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 20(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதிச் சட்டத்தின் 13(6) ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என கருதுகின்ற மீளாய்வாண்டின் அதிகார சபையின் செயற்படுநிலை தொடர்பாக எனது அவதானிப்புக்கள் மாத்திரம் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் ஆளுனர் தரப்பினரினதும் பொறுப்புக்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனத்தால் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்த மற்றும் காலரீதியில் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சுய வருமானம், செலவினம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய பிரகாரம் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

அந்த சட்டத்தின் 16(2) இன் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனம் தொடர்பான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகளின் மூலம் காண்பிக்கின்ற வகையில் காலஎல்லையில் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அந்த சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான நேர காலத்தில் தயாரிப்பதை உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கணக்காணித்துக் கொள்ளல் வேண்டும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்ட பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டு வழிகாட்டியின் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்குரிய நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கை திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.2 சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினம்

அதிகாரசபையினால் இறுதியாக தயாரித்த 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| நிதிக்கூற்றுக்களின் விடயங்கள் | பெறுமதி |
|---|---|
| | ரூபா |
| <u>சொத்துக்கள்</u> | |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | 12,125,428 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 19,272,809 |
| **மொத்த சொத்துக்கள்** | **31,398,237** |
| <u>உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்</u> | |
| உரிமை மூலதனம் | 6,554,761 |
| <u>பொறுப்புக்கள்</u> | |
| நடைமுறையல்லா பொறுப்புக்கள் | 11,051,564 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 13,791,915 |
| **மொத்த பொறுப்புக்கள்** | **31,398,240** |
| மொத்த வருமானம் | 55,811,496 |
| மொத்த செலவினம் | 53,628,592 |
| **மிகை** | **2,182,904** |

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 103 மற்றும் 104 | * 2015 முதல் 2019 வரையான காலப்பகுதியில் அதிகாரசபைக்கு சொந்தமாக காணப்பட்ட | பொருட்கள் தொலைந்தமை தொடர்பாக மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ரூபா 99,890 பெறுமதியான ஒரு லெப்டொப் கணனி மற்றும் ரூபா 61,900 பெறுமதியான இரண்டு டெப் கணனிகள் என்பன தொலைந்து போயிருந்த போதிலும், அது தொடர்பாக நிதிப் பிரமாணம் 103 மற்றும் 104 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பணிப்பாளர் சபைக்கு அறிவிக்குமாறு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டத்தில் ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | வேண்டும். |
| | | * PD – 6379 ஆம் இலக்க கெப் வண்டி 2020 ஆம் ஆண்டின் போது தலைவரால் ஓட்டிச் செல்லும் சந்தர்ப்பத்தில் நீர் போதியளவில் இடாமையினால் வாகனத்தின் என்ஜினுக்கு பாதிப்பு ஏற்பட்டிருந்தது. அது தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் பழுதுபார்ப்பதற்கு செலவாகிய ரூபா 498,110 தொகையை தலைவரிடமிருந்து அறவிட வேண்டும் என பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. எனினும் அந்த தொகையை அறவிடுவதற்கு அதிகாரசபையினால் மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்வதுடன் முன்னாள் தலைவர் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து அந்த தொகையை அறவிடுவதற்கு பல சந்தர்ப்பங்களின் போது கடிதம் மூலம் கோரப்பட்ட போதும் அதற்காக பதிலளிக்கப்படாமையினால் இது தொடர்பாக மிகுதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் போது ஆலோசனை கோரப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | அறவிட வேண்டியமைக்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்த தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 395(இ) | வங்கி கணக்கொன்று உள்ள ஒவ்வொரு நிறுவனத்தினாலும் | வங்கி இணக்கக்கூற்று தயாரித்தல் நிறுவனத்தின் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஒவ்வொரு மாத இறுதியின் போதும் ஏற்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல் நிலைமை தொடர்பாக அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் வங்கி இணக்கக் கூற்று தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் அதிகார சபையால் 2023 ஒக்டோபர் 30 ஆம் திகதி வரையில் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்குரிய வங்கி இணக்கக்கூற்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்கீட்டின் பிரதான பணியாக இருந்ததுடன் இதன் போது அதிகார சபையின் கணக்காளர் இந்தப் பணிகளை உரிய பிரகாரம் மேற்கொண்டிருக்க வில்லை. அதன் பிரகாரம் பணிப்பாளர் சபை தீர்மானத்தின் போது கணக்காளருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் செயல் முன்னேற்றம் எதிர்காலத்தில் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | நிதிப் பிரமாணம் 502(2) | 11 ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் ஒவ்வொரு பிரிவிற்கும் சொந்தமாக பயன்பாட்டில் காணப்படுகின்ற நிலையான சொத்துக்கள் தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வகைப்படுத்தல் முறைமையொன்று பின்பற்றப்படாதிருந்ததுடன் நிலையான சொத்துக்களுக்காக குறியீட்டு இலக்கம் வழங்கப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே நிலையான சொத்துப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் பௌதீக ரீதியாக உள்ள அளவு நிலையான சொத்து பதிவேட்டுடன் இணக்கம் செய்து ஒப்பீடு செய்யப்பட்டிருக்க வில்லை. சொத்துக்கள் தொடர்பாக உள்ளகக் | தற்போது நிறுவனத்தில் சகல நிலையான சொத்துக்களுக்காகவும் இலக்கம் மற்றும் நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கட்டுப்பாட்டு முறைமை பின்பற்றப்படாமையின் காரணமாக அதிகார சபையில் காணப்படுகின்ற சொத்துக்களின் பௌதீக இருப்பு தொடர்பாக முகாமைத்துவத்திற்கு உறுதிப்படுத்த முடியாதிருந்ததுடன் சொத்துக்களின் பாதுகாப்பு தொடர்பாக முகாமைத்துவம் உரியவாறு கவனம் செலுத்தியிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை 01/2020 இல் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 756 | உரிய நிதியாண்டிற்காக பொருள் மெய்மையாய்வு சபை நியமித்தல் திசெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புதல் அடுத்துவரும் நிதியாண்டின் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அதிகார சபையின் 2022 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2023 மே 31 ஆம் திகதி அதாவது 05 மாத தாமதத்துடன் நியமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2023 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்வதுடன் 2022 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு சபை நியமித்தல் அதிகார சபையின் பதவி அணியினரில் காணப்பட்ட வெற்றிடத்தினால் அத்திகதியில் இருந்த பதவியணியினர் நிறுவனத்தின் ஏனைய அபிவிருத்தி பணிகளில் நாடு முழுவதும் மும்முரமாக ஈடுபட்டிருந்தமையால் அவர்களை இந்தப் பணிகளுக்காக தொடர்புபடுத்திக் கொள்வதற்கு வசதியீனமாக இருந்ததன் காரணமாக இந்த நியமனங்கள் தாமதமடைந்திருந்தது. எனினும் 2023 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் 2022 ஆம் ஆண்டிற்குரிய மெய்மை ஆய்வு சபை நியமிப்பதற்கு முடியுமாக இருந்தது. | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு
### 3.1 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 இன் 17 ஆம் இலக்க தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 13((ஆ) மற்றும் 13(எ) இன் பிரகாரம் அதிகாரசபையின் கீழே குறிப்பிடப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பில் 2022 ஆம் ஆண்டின் போதும் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (i) சட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக வெளிநாட்டு சந்தைகளில் வெற்றியீட்டக்கூடிய உள்நாட்டு தொழில் முயற்சிகளை சர்வதேசமயப்படுத்தும் நோக்கில் தொழில் முயற்சிகளை இலங்கைக்கு வெளியில் அமைத்தல் மற்றும் அமுல்படுத்துவதை ஆர்வமூட்டுவதற்காக ஊக்குவித்தல். | தொழில் முயற்சி ஒன்றை சர்வதேசமயப்படுத்தும் நோக்கில் தொழில் முயற்சிகளை இலங்கைக்கு வெளியே ஸ்தாபித்தல் மற்றும் அமுல்படுத்துதலுக்காக கவனம் செலுத்துவதை ஊக்குவிப்பதற்கு விசேஷட நிகழ்ச்சித்திட்டம் அதிகார சபையின் மூலம் அமுல்படுத்தப்படாதிருந்த போதும் தற்போது அமுல்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மறைமுகமாக இந்த நோக்கங்களுக்கு பங்களிக்கின்றனர். இந்த நோக்கங்களுக்கு பதிலாக விஷேடமாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஏற்றுமதி அபிவிருத்தி சபைக்கு எங்களின் தொழில் முயற்சியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். எனினும் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்குரிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை எதிர்காலத்தில் அமுல்படுத்துவதற்கு அதிகார சபை எதிர்பார்க்கின்றது. | சட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | தொழில்நுட்ப விருத்தி, உற்பத்தி அபிவிருத்தி மற்றும் பேடன்ட் உரிமையின் வணிக மயப்படுத்தலுக்குரிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மேம்படுத்தலுக்காக தொழில்நுட்ப அபிவிருத்தி நிதியமொன்றைத் ஸ்தாபித்தல். | அதிகாரசபைச் சட்டத்தில் குறிப்பிட்டப்பட்ட பிரகாரம் இந்த தொழில்நுட்ப சேவை வழங்குவதைப் போன்று பேடன்ட் உரித்தை வணிக மயப்படுத்துவதற்குரிய தொழில்நுட்பம் மற்றும் மேம்படுத்தலுக்காக தொழில்நுட்ப நிதியமொன்றை ஏற்படுத்துவதற்கு அதிகார சபைக்கு இதுவரை முடியாதிருந்தது. இதற்காக ஆரம்ப நிதியத்தை வழங்குவதற்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு 2019 ஆம் ஆண்டில் முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்ட போதும் அதற்கான அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. எனினும் எதிர்காலத்தில் இதற்கான முன்மொழிவுகளைத் தயாரித்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் அதன் மூலம் நிதி வசதிகளை பெற்றுக்கொள்வதற்கும் அதிகாரசபை திட்டமிட்டுள்ளது. | சட்டத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட பணிகளின் செயல் முன்னேற்றம் கீழே குறிப்பிடப்படுகின்றது. | | |
| (i) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்குரிய தரவு முறைமையொன்றை ஸ்தாபிக்கும் செயற்திட்டத்தின் கீழ் ஆகக் குறைந்தது 500,000 தொழில் முயற்சியாளர்களின் தரவு முறைமையொன்றை பதிவு செய்து கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களின் தரவு முறைமையில் 500,000 தரவுகளை உள்ளடக்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் 260,000 தரவுகள் அளவில் உள்ளடக்குவதற்கு முடியுமாக இருந்தது. இந்த முறைமையில் ஏற்பட்ட தொழில்நுட்ப ரீதியான பிரச்சினைகளின் காரணமாக | திட்டமிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எந்தவொரு தொழில் முயற்சியாளரும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | இலக்கிடப்பட்ட அளவில் உள்ளடக்குவதற்கு முடியாதிருந்தது. தற்போது தரவு முறைமையில் தொழில்நுட்ப பிரச்சினைகள் நாளது வரையாக்கப்படுகின்றது. | |
| (ii) | மீளாய்வாண்டில் ஆகக் குறைந்தது 50 தொழில் முயற்சியாளர்களுக்கு Made in Sri Lanka இலட்சனை வழங்குவதற்கு (logo) திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந்த இலட்சனை வழங்கப் பட்டிருக்கவில்லை. | தெரிவு செய்யப்பட்ட தொழில் முயற்சியாளர்களுக்கு வியாபார பெயரை கையளித்தல் 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. மீளாய்வாண்டில் தெரிவு செய்யும் அளவுகோல்களை முறையாகத் தயாரித்தல், இலட்சனை நலன் பதிவேடு, விண்ணப்பதாரர்களின் இடங்களைப் பரீட்சிப்பதற்காக தேவையான விண்ணப்பம், களப் பரிசோதனைக்காக தேவையான விண்ணப்பம், அவதானிப்பு விண்ணப்பங்களைப் போன்று வியாபார பெயர்களை வழங்குவதற்கும் திட்ட முறைமையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில் இருந்து இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் உரிய இலக்கினை அடைந்து கொள்வதற்கு அதிகார சபைக்கு முடியுமாக இருந்தது. | -மேற்படி- |
| (iii) | மீளாய்வாண்டில் பட்டதாரிகளை தொழில் முயற்சிகளுக்கு ஈடுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பட்டதாரி தொழில் முயற்சியாளர்கள் 20 பேர்களுக்காக நிதி உதவியை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 07 தொழில் முயற்சியாளர்களுக்காக மாத்திரம் நிதி உதவி வழங்கப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டில் மூலதன செலவினமாக ரூபா 40 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதிகார சபைக்கு ரூபா 14.8 மில்லியன் மாத்திரமே கிடைத்திருந்தது. இதனால் மீளாய்வாண்டில் இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூபா 3.5 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதிகார சபைக்கு கிடைத்த வரையறுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் 07 | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | | பட்டதாரிகளுக்காக மாத்திரம் நிதி கையளித்தலை மேற்கொள்வதற்கு அதிகார சபைக்கு ஏற்பட்டிருந்தது. | |
| (இ) | அதிகார சபையினால் பயிற்சியளித்தல் மற்றும் நிதியுதவி வழங்குதல் மூலம் அபிவிருத்தி செய்யப்படுகின்ற தொழில் முயற்சிகள் தொடர்பாக காலரீதியில் பின்தொடர் நடவடிக்கைகள் அல்லது மதிப்பீடுகளை செய்வதற்காக மதிப்பீட்டு அளவுகோல்கள் அறிமுகப்படாதிருந்ததுடன் ஒவ்வொரு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திலும் உருவாக்கப்பட்ட செயல்நிலையில் உள்ள தொழில் முயற்சிகளின் எண்ணிக்கை அவர்களின் செயல் முன்னேற்றம் தொடர்பாக மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டமை உறுதிப்படுத்தப்படவில்லை. அதனால் அதிகார சபையின் பிரதான நோக்கமாக செயற்படுநிலையில் தொழில்முயற்சியாளர்களை உருவாக்கும் நோக்கத்தை நிறைவேற்றுதல் தொடர்பில் கணக்காய்வின் போது மதிப்பீட்டுக்கு உடபடுத்துவதற்கு முடியாதிருந்தது. | பிரதேச செயலகம் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படுவதுடன் பின்தொடர் நடவடிக்கைகள் பிரதேச செயலகத்தின் கடமைகளை மேற்கொள்கின்ற தொழில் முயற்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் போது இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய இலக்குகள் குழுக்களின் பயிற்சி தேவையினை இனங்கண்டு ஒழுங்கமைத்தல் மற்றும் சகல பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முறை தொடர்பாக முழுமையான அறிவு மற்றும் அனுபவம் பிரதேச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் அவர்கள் வேலை நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். மேலும் பிரதேச உத்தியோகத்தர்களினால் தரவு மற்றும் தகவல்கள் பேணிச் செல்லப்படுகின்றது. நலனாளிகளின் பதிவேடு கட்டியெழுப்புகின்ற தொழில் முயற்சியாளர்களன் தரவுகள் மற்றும் தகவல்கள் அவர்களினால் பேணிச் செல்லப்படுகின்றது நலனாளிகளை மதிப்பிடுதல் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் அவர்களால் மேற்கொள்ளப்படுவதுடன் 2024 ஆம் ஆண்டிலிருந்து அதற்கான அளவுகோல்கள் உள்ளடக்கி மாதிரி படிவம் ஒன்று | மதிப்பீட்டு அளவுகோலை அறிமுகப்படுத்துதல் மற்றும் தொழில் முயற்சியாளர்களுக்கு தொழில் முயற்சிகளின் செயல் முன்னேற்றம் தொடர்பாக மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அறிமுகப்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | |

## 3.2 முற்பண கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதி சுற்றறிக்கை 01/2020 இல் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(2) (ஆ) இன் பிரகாரம் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட முற்பண தொகை வழங்கப்பட்ட பணிகள் நிறை பெற்றவுடன் உடனடியாக தீர்க்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் 173 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 3,250,234 முற்பணம் மற்றும் 2017, 2018, 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட முறையே ரூபா 82,000 தொகை, ரூபா 399,690 தொகை, ரூபா 48,000 தொகை, 10,000 மற்றும் 88,000 முற்பணம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | இதில் குறிப்பிடப்பட்ட முற்பணங்கள் பிரதேச செயலகங்கள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களுக்காக வழங்கப்படுபவை ஆகும். முற்பணத்தை வழங்கும் போது இதில் குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படுவதுடன் தீர்த்து வைத்தலில் தாமதம் தொடர்பாக உரிய பிரதேச செயலகத்தில் சேவையாற்றுகின்ற அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் இருந்து விடயங்கள் விசாரணை செய்யப்பட்டு முற்பணங்களை தீர்த்தல் உரிய நேரத்தில் மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடப்பட்ட 173 சந்தர்ப்பங்களில் 34 சந்தர்ப்பங்கள் தற்போது முற்பணம் தீர்க்கப்பட்டுள்ளதுடன் மிகுதி முற்பணத்தை தீர்த்து வைப்பதற்காக தற்போது பிரதேச செயலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அதிகாரசபைக்கு ISO சான்றிதழை பெற்றுக் கொள்வதற்காக 2016 ஆம் ஆண்டில் ரூபா 71,762 தொகையும், 2017 ஆம் | கடந்த ஆண்டுகளின் போது கொவிட் தொற்றுநோய் தாக்கத்தின் காரணமாக இதனை மேற்கொள்வதற்கு வசதியீனமாக இருந்தது. | ISO சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டில் ரூபா 125,000 தொகையும், 2018 ஆம் ஆண்டில் ரூபா 35,880 தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 232,642 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போதும் ISO சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இதற்காக நிறுவனத்தின் உள்ளக செயற்பாட்டு நடைமுறைகள் அதிகார சபையினால் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே இந்த செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களுக்காக உள்ளக செயல் நடைமுறை தயாரித்து சமர்ப்பிப்பதற்கு அவர்களால் நிதி கோரப்பட்டதன் காரணமாகவும் அதற்காக போதியளவான பணம் நிதியேற்பாடு இல்லாமையின் காரணமாகவும் இந்த செயல் நடவடிக்கைகளை தயாரித்தல் உள்ளக ரீதியில் மேற்கொள்வதற்காக போதியளவான பதவியணியினர் இருக்காமையின் காரணமாக இந்த செயற்பாடுகளை மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. அவ்வாறே உரிய ஆண்டுகளில் இறுதி கணக்குகளை தயாரித்தல் தாமதம் அடைந்தமையினால் அது தொடர்பாக கணக்காய்வு நடவடிக்கைகளும் தாமதம் அடைந்ததன் காரணமாக நிறுவனத்தின் உள்ளபடியான கணக்காய்வை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. மீளாய்வாண்டு வரையில் இந்த செயற்பாடுகளுக்காக நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். |
| (ஆ) | தாபன விதிக்கோவையின் I அத்தியாயத்தின் 5.4.2 இன் பிரகாரம் வெற்றிடங்களின் சிறு எண்ணிக்கைக்காக கணிசமான எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் கிடைக்குமிடத்து, அந்த எண்ணிக்கை 25 இற்கு மேற்படுகின்ற | ஏற்றுக்கொள்கின்றோம். அதிகார சபைக்கு ஆட்சேர்த்தல். நிதி அமைச்சின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் மேற்கொள்ளப்படுவதுடன் இதில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் திட்ட முறைமையொன்று | தாபன விதிக்கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

சந்தர்ப்பங்களின் போது ஒவ்வொரு வெற்றிடங்களுக்கும் ஐந்து பேர் (5) என்ற விகிதத்தில் அழைக்கப்படுகின்ற எண்ணிக்கையை வரையறுப்பதற்கு நியமன அதிகார தரப்பினருக்கு முடியுமாக இருந்த போதிலும் அதிகாரசபையினால் ஒரு தொழில்முயற்சி மேம்பாட்டு உத்தியோகத்தர் வெற்றிடத்திற்காக 119 விண்ணப்பதாரர்களும், தொழில்முயற்சி மேம்பாட்டு உதவியாளரில் 06 வெற்றிடத்திற்காக 264 விண்ணப்பதாரர்களும் மற்றும் முகாமைத்துவ உதவியாளர்கள் வெற்றிடங்கள் 02 இற்காக 224 விண்ணப்பதாரர்களும் நேர்முக பரீட்சைக்காக அழைக்கப்பட்டிருந்தமையும் அதற்கான தபால் கட்டணம், உபசரிப்பு செலவினம் மற்றும் நேர்முக பரீட்சை சபைக்காக செலுத்துவதற்காக ரூபா 122,875 கிரயமும் செலவிடப்பட்டிருந்தது.

குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. விண்ணப்பித்த தகைமை பெற்ற சகல விண்ணப்பதாரர்களுக்கும் சந்தர்ப்பங்களை வழங்குவதற்காக தகைமை பெற்ற சகல விண்ணப்பதாரர்களும் நேர்முக பரீட்சைக்காக அழைப்பதற்கு ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் முகாமைத்துவம் தீர்மானம் எடுத்திருந்தது. அதன் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.